
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1296

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

173

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பேரூர் ஆ.நடராசன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# பேரூர் ஆ.நடராசன் தொழிலாளர் அணித் தூண்!

ஓவியம் : ரவி பேலட்



திராவிடச் சிந்தனை, எளிமையான அணுகுமுறை, தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடும் உறுதி ஆகியவற்றின் அடையாளமாகத் திகழ்ந்தவர், பேரூர் ஆ.நடராசன். கோவை மாவட்டத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் அடையாளம். பேரூர் தொகுதி மக்களால் நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தொழிலாளர்களின் நலனுக்காகவும் கழகத்தின் வளர்ச்சிக்காகவும் நீண்டகாலம் பாடுபட்ட மூத்த உடன்பிறப்பு என இன்றைய கழகத் தலைவர் போற்றிய முன்னோடி. கோவைக் கழகத்தினர் பேரூரார் என அன்போடு அழைப்பர்.

இளமைக்காலம் முதலே கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பதில் அக்கறை கொண்டதுடன், அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முனைப்புடன் செயல்பட்டவர். அந்த அனுபவம்தான் பின்னாளில், கழகத்தின் தொழிற்சங்க அமைப்பான தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தொடக்க காலங்களில் முனைப்புடன் செயல்படவைத்தது. கோவையில் பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டங்கள், அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றிய தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் கழகத்தின் பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர்.

ஈடுபாடு, 1977-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பேரூர் தொகுதியில் கழகத்தின் வேட்பாளராகக் களம் காணும் வாய்ப்பைக் கொண்டுவந்தது. கம்யூனிஸ்ட் கட்சியினர் வசமிருந்த அந்தத் தொகுதியை, எம்.ஜி.ஆர். அலை அடித்த அந்தத் தேர்தலில் வெற்றிவாகைச் சூடி, முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினரானார். 1977-ஆம் ஆண்டு தேர்தலில், அ.தி.மு.க. கோவையில் பேரூர் தொகுதியைத் தவிர, அனைத்துத் தொகுதிகளையும் கைப்பற்றி இருந்தது. அந்த அளவுக்கு மக்கள் செல்வாக்குடன் திகழ்ந்தவர் நடராசன்

1980-ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தாலும், 1984-ஆம் ஆண்டு மீண்டும் பேரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். தமிழ்நாடு முழுவதும் கழகத்துக்குக் கடினமான அரசியல் சூழல்

> தொழிலாளர்களின் உரிமைக்குரல் ஒலிக்கும் வரைக்கும், பேரூர் ஆ.நடராசனின் பெயர் கோவைக் கழக வரலாற்றில் என்றும் நினைவில் நிற்கும்!

### கோவைக் கழக முன்னோடி

'கழகத்தின் மாநாடுகள்', 'பொதுக்கூட்டங்கள்', 'தேர்தல் பணிகள்' எனக் கழகம் அறிவித்த அரசியல் நடவடிக்கைகளில் முன்னணியில் நின்றவர் நடராசன். கோவை மண்ணில் கழகத்தின் வளர்ச்சிக்குத் தொழிலாளர் இயக்கம் முக்கியமான அடித்தளமாக இருந்த காலகட்டத்தில், தொ.மு.ச. பணியையும் கழக அமைப்புப் பணியையும் இணைத்துச் செயல்பட்டார். தொழிலாளர்களிடம் கழகத்தின் கொள்கைகளையும் சமூக நீதிப் பார்வையையும் எடுத்துச்செல்வதில் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது. சி.டி.தண்டபாணி. மு.கண்ணப்பன் போன்ற முன்னோடிகளுடன் தொகுதி முழுவதும் கழகத் தோழர்களுடன் இணைந்து களப்பணி ஆற்றியவர்.

### நான்கு முறை சட்டமன்ற உறுப்பினர்

கழகப் பணிகளில் அவர் கொண்டிருந்த நிலவிய அந்தத் தேர்தலிலும் பேரூர் தொகுதி நடராசனுக்குத் தனது ஆதரவை வழங்கியது.

மீண்டும், 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், 64,565 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். 1991 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு, தோல்வியைச் சந்தித்தார். தோல்வியால் அவரது கழகப் பணி தளரவில்லை.

1996-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, பேரூர் தொகுதியை மீண்டும் கழகத்தின் வசமாக்கினார். அந்தத் தேர்தலில், 96,507 வாக்குகள் பெற்று, 61.01 சதவிகித வாக்குகளுடன் அபார வெற்றி பெற்றிருந்தார்.

### மருந்துச்சீட்டு

தொடர்ச்சியாகத் தேர்ந்த வெற்றிகள், மக்கள் அவரது பணிகளில் கொண்டிருந்த நம்பிக்கையின் அடையாளமாக இருந்தன.

தேர்தல் தோல்வி அடைந்த காலங்களிலும் மக்களோடு மக்களாகப் பயணித்தவர் என்று கழகத்தினர் நினைவுகூர்கின்றனர்.

நான்கு முறை சட்டமன்ற உறுப்பினர் என்கிற பெருமையெல்லாம் அவரிடத்தில் இருந்ததில்லை. கழகத்தின் தொழிலாளர் அணிச் செயலாளர் என்கிற பொறுப்புதான் அவருக்குப் பெருமை அளிப்பதாக இருந்தது என்கின்றனர்.

பொதுமக்கள் நேரடியாகத் தங்கள் கோரிக்கைகளை எழுதி, மாவட்டக் கழகத்தின் தொழிற்சங்கப் பிரிவுக்கு அனுப்பிவைத்தால், அந்தக் கோரிக்கை தொடர்பாக, சம்பந்தப்பட்ட துறைக்கு நடராசன் தன்னுடைய லெட்டர் பேடில் எழுதி, அதை அனுப்பிவைப்பாராம். மாவட்டக் கழக அலுவலகத்துக்கு யார் சென்றாலும், அண்ணன் நடராஜன் அவர்கள் மருந்துச்சீட்டு கொடுத்துவிடுவார் என்று நடராசன் அவர்களின் லெட்டர் பேட் கடிதங்களைக் கிண்டல் செய்தவர்களும் உண்டு" என்கின்றனர், அவரோடு பழகியவர்கள். அந்த அளவுக்கு மக்களிடம் நற்பெயர் பெற்றிருந்தவர்.

தொ.மு.ச. பேரவையின் மாநிலத் தலைவராக இருந்த செ.குப்புசாமிக்குப் பின்னர், கலைஞரின் நம்பிக்கைக்குரிய தொ.மு.ச. தலைவராகத் திகழ்ந்தவர்.

### கழக உணர்வே வாழ்க்கை

நான்கு முறை சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமை ஒருபுறம் இருந்தாலும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் மாநிலத் தலைவர் என்ற பொறுப்பு மற்றொரு புறம் இருந்தாலும் பேரூர் நடராசனின் அடையாளம், 'கழகத்தின் எளிமையான தொண்டர்' என்பதுதான். தொழிலாளர் இயக்கத்தில் இருந்து அரசியல் களத்துக்கு வந்த அவர், உழைக்கும் மக்களின் பிரச்சினைகளைச் சட்டமன்றத்திலும், அரசியல் களத்திலும் தொடர்ந்து எடுத்துச்சென்றார். கோவை பேரூர் பகுதியில் அனைத்து மக்களின் ஒற்றுமைக்கும் தொடர்ச்சியாகப் பாடுபட்டவர்.

கோவை மாவட்டத்தில், கழகத்தின் வளர்ச்சிக்காக உழைத்த மூத்த முன்னோடி, 2017-ஆம் ஆண்டு ஜூன் 13 அன்று தனது 78-வது வயதில் இயற்கை எய்தினார். உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பலனின்றி காலமானார். அவரது மறைவு, கோவைக் கழகத்தினருக்கும் தொழிலாளர் இயக்கத்தினருக்கும் பெரும் துயரமும் பேரிழப்பும் ஆகும் என அஞ்சலி குறிப்பு எழுதினார் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். அவர் எழுதிய இரங்கலில், தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்த மாபெரும் தூண் எனப் போற்றியதுடன், நேரில் வந்து இறுதி மரியாதை செய்தார். தொழிலாளர்களின் உரிமைக்குரல் ஒலிக்கும் வரைக்கும், பேரூர் ஆ.நடராசனின் பெயர் கோவைக் கழக வரலாற்றில் என்றும் நினைவில் நிற்கும்!

...துடிக்கும்

## ஒரே வாரத்தில் 'அந்தர் பல்டி!'

தொகுதி மறுவரையறை விவகாரத்தில், ஒரே வாரத்தில் முன்னுக்குப் பின் முரணாக நிலைப்பாடு எடுத்து அம்பலப்பட்டுள்ளார், த.வெ.க. முதல்வர் ஜோசப் விஜய். இது தொடர்பாக, பத்திரிகையாளர் தெ.சு.கவுதமன் முகநூலில் எழுதியுள்ள விமர்சனப் பதிவில்...

"ஆளுங்கட்சி இந்த விவகாரத்தில், வீம்புக்காகக் கடந்த 12-ஆம் தேதி தமிழக எம்.பி.க்களின் கூட்டத்தைக் கூட்டியது. அரசியல் கட்சித் தலைவர்களுக்குக்கூட முறையாகக் கடிதம் எழுதவில்லை. அக்கூட்டத்தில் த.வெ.க. கூட்டணி கட்சிகள் மட்டும் கலந்துகொண்ட நிலையில், 'ஃபேர் டிலிமிட்டேஷன் (Fair Delimitation)லாம் கிடையாது... நோ டிலிமிட்டேஷன் (No Delimitation)தான். தொகுதிகள் எண்ணிக்கையை உயர்த்தவே கூடாது! உயர்த்த நினைத்தால், அவ்ளோதான் பார்த்துக்க!' எனக்கூறி தீர்மானம் போட்டார்கள்!

'அடேங்கப்பா! இம்புட்டு கோவக்காரய்ங்களா?!' என்று ஆச்சர்யப்படுத்தினார்கள்! அதோடு விடாமல், த.வெ.க. கூட்டணியினர், 'தி.மு.க. தன்னோட நிலைப்பாட்டை ஒழுங்கா சொல்லணும்... இதுல தி.மு.க. மேல எங்களுக்கு டவுட்டு!' என்றெல்லாம் சவுண்டு விட்டாங்க, ஆச்சா!

அடுத்த ஒரே வாரத்துல... என்ன அங்க சத்தம்?னு குரல் கொடுத்துக்கிட்டே அமீத்து இங்க வர்றார்! அவரை நம்ம வீர முதல்வர் சந்திக்கிறார்... மீட்டிங்கில் பேசுகிறார்... என்ன பேசுறார்னு பார்த்தால், எங்களுக்குத் தேவை ஃபேர் டிலிமிட்டேஷன் (Fair Delimitation) என்கிறார்! தொகுதி மறுவரையறையே கூடாதுன்னு சொல்லிட்டு... ஒரே வாரத்துல ஏன் பல்டியடிக்கிறாய்ங்கன்னு பார்த்தால், நேற்றிரவே அமீத்து கொஞ்சம் கோபமாகவே பேசிட்டாராம்! நீங்க எங்க பக்கமா? காங்கிரஸ் பக்கமா? இப்பதான் தி.மு.க. கூட்டணிய உடைச்சாச்சுல்ல... இனி முக்கியமான பிரச்சினைகளில், சமத்தா எங்க பக்கமே நிக்கணும்னு சொல்லிட்டாராம்!

உடனே, நைட்டோட நைட்டா ஃபேர் டிலிமிட்டேஷன் (Fair Delimitation) போதும்னு முடிவெடுத்துட்டு, முதல்வர்கள் மாநாட்டில் அதைப் பேசியிருக்கார்! இப்படிப் பேசுவது குறித்து காங்கிரஸ், வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் கலந்து பேசவும் இல்லையாம்! அவர் டேபிள் மேல, கூட்டணிக் கட்சிகள் வேணுமா? அமீத்து ஆதரவு வேணுமா?ன்னு ரெண்டு கேள்விகளை ரெண்டு பக்கமும் எழுதிவச்சு, ஏதாவது ஒன்றை செலெக்ட் பண்ணச் சொன்னாங்களாம்... யோசிக்கவே இல்லையாம், படக்குன்னு அமீத்து ஆதரவு வேணும்ங்கிறத செலெக்ட் பண்ணிட்டாராம்! பொழைக்கத் தெரிந்தவர்" என்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



சீ.மு.பாண்டியன்



### நினைவுகளில் அகலாத படம்!

2003-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் 'தொல்காப்பியப் பூங்கா' நூல் வெளியீட்டை நடத்தினார். அந்தக் காலகட்டத்தில், திருச்சி வருகைதந்த அவர், சங்கம் ஓட்டலில் அந்த நூலைப் பெற்றுக்கொள்ளும் கழகத்தினருக்கு நேரம் ஒதுக்கி இருந்தார். அப்போது, மறைந்த என் மனைவி திலகவதி, மகள் உலகநாயகி ஆகியோருடன் சென்று தலைவரிடமிருந்து நூலைப் பெற்றேன். தலைவருடன் என் மனைவியும் மகளும் இருக்கும் இந்தப் படம், என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நினைவாக உள்ளது.

– சீ.மு.பாண்டியன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி, காட்டுப்புத்தூர், திருச்சி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நாம் மக்களைச் சந்திக்கிறோம்!

1963-ஆம் ஆண்டு, 'மன்றம்' இதழ் ஆண்டு மலரில், பேரறிஞர் அண்ணா எழுதியது, "நாம் தினந்தோறும் மக்களைச் சந்திக்கிறோம்; அவர்களும் நமது கூட்டங்களுக்குத் தவறாமல் வருகிறார்கள். இதன் உண்மைப் பொருள் என்ன? திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகள் மீண்டும் மீண்டும் வந்து கேட்குமாறு மக்களைத் தூண்டுகின்றன; மக்களும் மீண்டும் மீண்டும் வந்து கேட்கிறார்கள்" என்று கழக வளர்ச்சியைப் பற்றி குறிப்பிட்டார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900